**தேவகோட்டை நகராட்சி.**

**<u>அவசரக்கூட்டம்.</u>**

தேவகோட்டை நகராட்சியில் நகர்மன்ற அவசரக்கூட்டம் **15.07.2022**ம், தேதி வெள்ளிக் கிழமை காலை **12.00** மணிக்கு நடைபெறவுள்ளது. அவ்வமயம் கீழ்க்கண்ட பொருட்கள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. தாங்கள் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளவேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

(ஒப்பம்)கா.சுந்தரலிங்கம்

**நகர்மன்ற தலைவர்**
**தேவகோட்டை நகர்மன்றம்**

**<u>தேவகோட்டை நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டுவரப்படும் பிரேரணை</u>**

தேவகோட்டை நகராட்சியில் ஒப்பந்தப்புள்ளி பணிகள் எடுத்து செய்து வரும் ஒப்பந்ததாரர்கள் தாங்கள் ஏற்கனவே எடுத்த பணியினை முடித்த பின்பு புதிய ஒப்பந்தப்புள்ளி வழங்கப்படும் எனவும், ஒப்பந்தப்புள்ளி எடுத்தவர்கள் வேலை உத்தரவில் குறிப்பிட்டுள்ள ஒப்பந்த காலவரம்பிற்குள் பணியை தொடங்கி முடிக்காவிட்டால் அந்த ஒப்பந்தப்புள்ளியினை ரத்து செய்யப்படும் எனவும், அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களால் **08.07.2022**ம், தேதியன்று நடைபெற்ற நகர்மன்றக்கூட்டத்தில் ஏகமனதாக சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>அலுவலகக்குறிப்பு–</u>** மன்றம் ஏற்கலாம்.

**பிரேரனை ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**<u>பொருள்–69</u>**

தேவகோட்டை நகராட்சியில் தேசிய நகர்நலத்திட்டம் **2021–2022**ன், கீழ் நிர்வாக அனுமதி பெறப்பட்ட கீழ்கண்ட பணிக்கு **01.06.2022**ம், தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் நகர்மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **வேலையின் பெயர்** | **மதிப்பீடு ரூ (லட்சத்தில்)** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **விலைவிகிதம் மதிப்பீட்டை விட** |
|---|---|---|---|---|
| | தேசிய நகர்நலத்திட்டம் 2021–2022ன், கீழ் தேவகோட்டை நகராட்சிகுட்பட்ட வார்டு எண்.18, காந்தி ரோட்டில் புதியதாக நகர்நல மைய கட்டிடம் | **75.00** | திரு.டி.பாண்டி, ஒப்பந்ததாரர், தேவகோட்டை | **4.94** அதிகம் |
| | | | திரு.கே.சுந்தரபாண்டியன், ஒப்பந்ததாரர், காரைக்குடி. | 8.26 அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | கட்டுதல் பணி | | | |

<u>**அலுவலகக்குறிப்பு–**</u>
அ)மன்றம் ஏற்கலாம்
ஆ)பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்கலாம்.
இ) பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் 14.06.2022–ல் முன் அனுமதிபெற்றதை மன்றம் அனுமதிக்கலாம்.
**தீர்மான எண்.69 – அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள்–70</u>

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட பழைய வார்டு எண்.18, புதிய வார்டு எண்.27, ஒத்தக்கடை பகுதி சர்வே வார்டு எண்.P, பிளாக் எண்.1, நகரளவு எண்.74,75,77 –ல், இடம் தேர்வு செய்யப்பட்டு புதிய ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுதல் பணிக்கு உயர்திரு. மாவட்ட ஆட்சியர் சிவகங்கை அவர்களால் ரூ.75.00 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு முதன்மை பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையரகம் சென்னை அவர்களால் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்போது ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு வேலை உத்தரவும் வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட ஆரம்ப சுகாதார மையம் அமைய இருக்கும் இடத்தில் பழைய உபயோகமற்ற சிதிலமைடந்த மருத்துவமனை கட்டிடம் ஒன்று உள்ளது. இந்த கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்தினால் மட்டுமே இவ்விடத்தில் புதிய கட்டிடம் கட்டிட இயலும். எனவே மேற்காணும் இடத்தில் பழைய உபயோகமற்ற சிதிலமடைந்த கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்திட குறுகிய கால பொதுஏலம் கோரி, மேல் நடவடிக்கை தொடர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலகக்குறிப்பு–**</u>மன்றம்அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.70 – அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள்–71</u>

தேவகோட்டை நகராட்சிக்கு சொந்தமான உரங்கிடங்கு 4.50 ஏக்கர் பரப்பளவில் தேவகோட்டை நகரில் இருந்து சுமார் 15.கி.மீ தொலைவில் உள்ள தேவகோட்டை ரஸ்தா பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது. கடந்த 2013 ஆண்டு முதல் இவ்வுரக்கிடங்கில் குப்பைகள் கொட்டப்பட்டு வருகிறது. அக்குப்பைகளை Bio – Mining, முறையில் அப்புறப்படுத்திட அண்ணா பல்கலைக்கழகத்திற்குட்பட்ட யூனிவர்சிட்டி காலேஜ் ஆப் இஞ்சினியரிங், ராஜமடம் பட்டுக்கோட்டை கல்லூரி நிர்வாகத்தால் அளவீடு செய்யப்பட்டு சுமார் 34,700 கன மீட்டர் அளவில் குப்பைகள் குவிக்கப்பட்டுள்ளதாக கணக்கீட்டுதாளுடன் அறிக்கை பெறப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தை சேர்ந்த உதவி பொறியாளர்களால் மதிப்பீடு ஆய்வு செய்யப்பட்டது. உரங்கிடங்கில் உள்ள குப்பைகளை அளவீடு செய்து இறுதி செய்யும் பணியினை அண்ணா பல்கலைக்கழகம் சென்னை மூலம் மட்டுமே மேற்கொள்ள வேண்டுமெனவும் அவர்களால் தரும் அறிக்கையினை மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்

எனவும் அண்ணா பல்கலைகழகத்தினை ஈடுபடுத்தி அளவீடு செய்து குப்பையின் அளவை இறுதி செய்து தருமாறு உத்தரவிட்டனர். இந்த உத்தரவுப்படி, அண்ணா பல்கலைகழகத்தை தொடர்பு கொண்டு உரக்கிடங்கில் குவிக்கப்பட்டுள்ள குப்பைகளை அளவீடு செய்து தருமாறு கோரியதில். அண்ணா பல்கலைகழகத்தினர் தங்களால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் விலைப்புள்ளிப்பெற்று அளவீடு செய்துகொள்ளுமாறு அளவீடு செய்யும் நிறுவனம் தரும் அறிக்கையினை இறுதி செய்து தருவதாகவும், கூறியுள்ளார்கள். எனவே குப்பைகளை அளவீடு செய்து கணக்கீட்டுத்தாள் தயார் செய்யும் பணியினை அண்ணா பல்கலைகழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு–</u>**

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்காணும் பணிக்கான செலவீனத்தை இந்நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.71 – அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள்–72</u>

தேவகோட்டை நகராட்சி பகுதிகளில் உள்ள அனைத்து மழைநீர் வடிகால்களையும், கால்வாய்கள் மற்றும் சிறுபாலங்கள் அடிப்புறத்தினையும் 100 சதவிகிதம் தூர்வாரி தூய்மைப்படுத்திட நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது கடித ந.க.எண்.10383/2021/மா.தி2, நாள்27.06.2022ன்படி, அறிவுறுத்தப்பட்டுள்ளதை தொடர்ந்து தேவகோட்டை நகராட்சி பகுதிகளுக்குட்பட்ட தாழ்வான இடங்களில் மழைநீர் தேங்கா வண்ணம், முறையாக தூர்வாரி மழைக்கால தொற்றுக்கள் ஏற்படா வண்ணம் இருப்பதற்கு ஏதுவாக நகர்பகுதியில் உள்ள 84 கிலோமீட்டர் நீளம் உள்ள மழைநீர் வடிகால்களையும், 15 கிலோமீட்டர் உள்ள குளக்கால்களையும், மற்றும் 302 எண்ணிக்கையிலான சிறு பாலங்களையும், JCB,HITACHI மற்றும் டிராக்டர் போன்ற வாகனங்களை கொண்டு சுத்தப்படுத்தும் பணி மேற்கொள்ள மதிப்பீடு ரூ.10.00/– லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு–</u>**

அ)மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)பணியின் அவசர அவசியம் கருதி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.72 – அனுமதிக்கப்பட்டது.**

பொருள்–73

தேவகோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தமிழக அரசின் உத்தரவின்படி, கூடுதல் தலைமை செயலாளர் சென்னை அவர்களின் 06.07.2022ம்,தேதிய காணொளி ஆய்வுக்கூட்டத்தில் தெரிவித்துள்ளவாறு. நகரங்களின் தூய்மைக்கான மக்கள் இயக்கத்தின் ஒரு பகுதியாக இந்நகர் பகுதி மக்களுக்கு திடக்கழிவு மேலாண்மை, தடைசெய்யப்பட்ட பிளாஸ்டிக் பயன்பாடு தவிர்த்தல், கொரோனா விழிப்புணர்வு, மற்றும் மீண்டும் மஞ்சபை பயன்பாடு, பற்றிய விழிப்புணர்வு ஸ்டிக்கர்ஸ், நோட்டிஸ் போன்றவற்றின் மூலம் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு கீழ்காணும் விபரப்படியான நோட்டிஸ் மற்றும் ஸ்டிக்கர்கள் தேவைப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | நெகிழி பயன்பாட்டை ஒழித்து மஞ்சள்பைகளை பயன்படு குறித்த விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள். | 10,000 எண்ணம் |
| 2. | கொரோனா விழிப்புணர்வு முககவசம் கட்டாயம் குறித்த விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள் | 10,000 எண்ணம் |
| 3. | திடக்கழிவு மேலாண்மை விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள் | 10,000 எண்ணம் |

மேற்காணும் விபரப்படியான நோட்டிஸ்கள் மற்றும் ஸ்டிக்கர்கள், அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு சங்கத்தின் மூலம் விலைப்புள்ளி பெற்று வாங்கவும். அதற்காகும் உத்தேச செலவீனம் ரூ.5,00,000/–த்திற்கு (ரூபாய் ஐந்து லட்சம்) செலவு மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலகக்குறிப்பு–**</u>

அ)மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)மேற்காணும் செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.73 – அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள்–74</u>

தேவகோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட 27 வார்டு பகுதிகளில் 45 DBC பணியாளர்களை கொண்டு 29.04.2022–ம், தேதிய பணி நீட்டிப்பு உத்தரவின்படி, விவேகா அறக்கட்டளை (தொண்டு நிறுவனம்) மூலம் டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் பணிநீட்டிப்பு காலம் 30.06.2022 அன்றுடன் முடிவடையும் நிலையில் உள்ளது.

துப்புரவு ஆய்வாளர்களின் குறிப்பில் தற்போது டெங்கு காய்ச்சல் பரவி வருவதால் டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களின் ( DBC) பணி அத்தியாவசியமாகிறது. மேலும் உயர்திரு. மாவட்ட ஆட்சித்தலைவர் சிவகங்கைஅவர்களின் 2022–2023ம் ஆண்டிற்கான தினக்கூலி அடிப்படையில் 45 DBC பணியாளர்களுக்கு ஊதியம், ESI, EPF அனைத்தும் கணக்கீடு செய்து நகர்மன்ற அனுமதிபெற்று, ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்தரவு வழங்க போதுமான கால அவகாசம் தேவைப்படுகிறது. மேலும் விவேகா அறக்கட்டளை தேவகோட்டை நிறுவனத்தின் பணிக்காலம் முடிவடையில் நிலையில் அவசர அவசியம் கருதியும், பொதுமக்களின் பொதுசுகாதார நலன் கருதியும், மேற்படி பணியினை விவேகா அறக்கட்டளை தேவகோட்டை நிறுவனம் மூலம் 45 DBC பணியாளர்களை கொண்டு மேலும் ஒரு மாத காலத்திற்கு (01.07.2022 முதல் 31.07.2022 வரை ) பணிநீட்டிப்பு செய்து வழங்கவும். தற்போது வழங்கி வரும் பழைய விலைவிகிதத்தில் பணி மேற்கொள்ள உத்தேச செலவீனம் ரூ.3,50,000/–த்திற்கு (ரூபாய் மூன்று லட்சத்தி ஐம்பதாயிரம் மட்டும் ) செலவு மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலகக்குறிப்பு–**</u>

அ)மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)மேற்காணும் செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

இ) பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் 29.06.2022–ல் முன் அனுமதிபெற்றதை மன்றம் அனுமதிக்கலாம்.
**தீர்மான எண்.74 – அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள்–75</u>**

தேவகோட்டை நகராட்சிக்கு எதிராக தொடரப்பட்ட வழக்குகளுக்கு ஆணையாளர் அவர்களின் சார்பாக வழக்குகளில் ஆஜராகி எதிர்வாதுரை மற்றும் வாதுரைக்காக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் திரு.ஜி.ஆனந்தக்குமார் வழக்கறிஞர் அவர்கள், ஆஜராகிய வழக்குகள் கீழ்கண்டவிபரப்படி.

| வ.எண் | வழக்கின் விபரம் மற்றும் பெயர் | வழக்கறிஞருக்கு வழங்கவேண்டி தொகை |
|---|---|---|
| 1. | திரு.மு.தினகரராஜு என்பவர் பணி உயர்வு தொடர்பான வழக்கு W.P.(MD) No,26428/2019, | ரூ.7,500 |
| 2. | திரு.பரமசிவம் என்பவர் மாட்டுசந்தை இடம் தொடர்பான வழக்கு W.P.(MD) No,21188/2021, | ரூ.12,500 |
| 3. | திரு.எஸ்.கிருஷ்ணன் என்பவர் ஓய்வூதியம் தொடர்பான வழக்கு W.A.(MD) No,2193/2021, W.P.(MD) No,13718/2021, | ரூ.35,000 |
| 4. | திருமதி.நா.முத்துலெட்சுமி, என்பவர் கூட்டுறவு கடன் தொடர்பான த வழக்கு W.P.(MD) No,21209/2021, | ரூ.15,000 |
| | **மொத்தம்** | **70,000** |

மாவட்ட நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்குகளில் திரு.எஸ்.குமார் நகர்மன்ற வழக்கறிஞர் ஆஜராகிய வழக்குகள் கீழ்கண்டவிபரப்படி.

| வ.எண் | வழக்கின் விபரம் மற்றும் பெயர் | வழக்கறிஞருக்கு வழங்கவேண்டி தொகை |
|---|---|---|
| 1. | திருமதி.கஸ்துாரி என்பவர், இடம் தொடர்பான வழக்கு IA.No.14/2021,OS.No.101/2016. | 7,500 |
| 2. | )திருமதி.கஸ்துாரி என்பவர் இடம் தொடர்ந்த வழக்கு IA.No.15/2021,OS.No.101/2016. | 7,500 |
| 3. | திரு.பெரி.முத்து அம்பலம் என்பவர் இடம் தொடர்பான தொடர்ந்த வழக்கு IA.No.2/2021,OS.No.45/2017. | 7,500 |
| 4. | திரு.எம்.கண்ணன், என்பவர் இடம் ஆக்கிரமிப்பு தொடர்பான தொடர்ந்த வழக்கு OS.No.69/2021, | 5000 |
| 5. | திரு.காத்தவராயன், என்பவர் பட்டா தொடர்பான தொடர்ந்த வழக்கு OS.No.203/2021. | 5000 |
| 6. | திரு.எஸ்.அமல்ராஜ் என்பவர் சொத்துவரி மற்றும் பெயர் மாற்றம் தொடர்பான தொடர்ந்த வழக்கு OS.No.283/2021, | 5000 |
| 7. | திரு.தியாகராஜன் என்பவர் இடம் தொடர்பான | 6500 |

| | | |
|---|---|---|
| | தொடர்ந்த வழக்கு OS.No.100/2016, | |
| | **மொத்தம்** | **44,000** |

மேற்காணும் விபரப்படியான, வழக்குகளுக்கு ஆஜராகிய வகையில் திரு.எஸ்.குமார், நகர்மன்ற வழக்கறிஞர், (மாவட்ட நீதிமன்றம் தேவகோட்டை) அவர்களுக்கு ரூ.44,000/–ம், மற்றும் திரு.ஜே.ஆனந்தகுமார், நகர்மன்ற வழக்கறிஞர் (சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை) அவர்களுக்கு ரூ.70,000/–ம், வழங்க இரண்டும் சேர்த்து மொத்த தொகையாக ரூ.1,14,000/– செலவு மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு–</u>**

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்காணும் செலவினத்தை பொதுநிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.75 – அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள்–76</u>**

தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்புகள் 2022–23ன்படி தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட அண்ணா பேருந்து நிலையத்தில் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ள ரூ. 1.00 கோடி மதிப்பீட்டிலான பணிக்கு விரிவானதிட்ட அறிக்கை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பி தொடர் நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு –</u>**

1) மேற்காணும் பணியின் அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

2) பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் 11.07.2022–ல் முன் அனுமதிபெற்றதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.76 – அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள்–77</u>**

தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்புகள் 2022–23ன்படி தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட இராம்நகர், அழகாபுரிநகர் பகுதியில் உள்ள அழகப்பா ஊரணி பூங்காவினுள் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ள ரூ. 1.00 கோடி மதிப்பீட்டிலான பணிக்கு விரிவான திட்ட அறிக்கை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பி தொடர் நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு –</u>**

1) மேற்காணும் பணியின் அவசியம் கருதிமன்றம் அனுமதிக்கலாம்.

2) பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் 11.07.2022–ல் முன் அனுமதிபெற்றதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.77 – அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள்–78</u>

தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்புகள் 2022–23ன்படி தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட கண்டதேவி ரோடு வாரச்சந்தை இடத்தில் புதியதாக தினசரி சந்தை அமைக்க ரூ. 3.00 கோடி மதிப்பீட்டிலான பணிக்கு விரிவானதிட்ட அறிக்கை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பி தொடர் நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு –</u>

1) மேற்காணும் பணியின் அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் 11.07.2022–ல் முன் அனுமதிபெற்றதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.78 – அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள்–79</u>

தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்புகள் 2022–23ன்படி தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட கீழ்காணும் நீர்நிலைகளில் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ள விரிவான விரிவானதிட்ட அறிக்கை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னைஅவர்களுக்கு அனுப்பி தொடர் நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | திட்டம் பெயர் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1. | நீர்நிலைகள் மேம்பாட்டுபணி | 1) தேவகோட்டை நகராட்சியில் காட்டூரணியில் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளுதல். | 200.00 |
| | | 2) தேவகோட்டை நகராட்சியில் பெருமா கண்மாய் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளுதல். | 200.00 |
| | | 3) தேவகோட்டை நகராட்சியில் அழகப்பா ஊரணி மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளுதல். | 100.00 |

<u>அலுவலக குறிப்பு –</u>

1) மேற்காணும் பணியின் அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

2) பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் 11.07.2022–ல் முன் அனுமதிபெற்றதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.79 – அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள்–80</u>

தேவகோட்டை நகராட்சி அலுவலகத்தில் அலுவலக பாதுகாப்பிற்காக ஆறு ஆண்டுகளுக்கு முன் கண்காணிப்பு கேமரா(CCTV) பொருத்தப்பட்டது. ஆறு ஆண்டுகளாக தொடர் இயக்கத்தில் இருந்த காரணத்தால் கேமராக்கள் மற்றும் அதன் உதிரிபாகங்கள் அனைத்தும் செயல்திறன் குறைந்து தற்பொழுது முழுமையாக இயக்கத்தில் இல்லாமல் உள்ளன. ஏனவே அலுவலகத்தில் உள்ள அனைத்து அறைகளிலும் பாதுகாப்பு நலன் கருதி கண்காணிப்பு கேமராக்கள் பொருத்த வேண்டியுள்ளது அவசியமாகிறது. ஏனவே அலுவலக நலன் மற்றும் பணியாளர்கள் பொதுமக்கள் நலன் கருதி அலுவலக அறைகளில் CCTV கேமரா பொருத்திட உத்தேச செலவீனம் ரூ 2.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு –</u>

1)மேற்காணும் பணியின் அவசியம் கருதிமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.80 – அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள்–81</u>

தேவகோட்டை நகராட்சிக்கு 2022–23 சட்டமன்றகூட்டத் தொடரில் மானிய கோரிக்கையின் கீழ் மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்களால் தேவகோட்டை நகராட்சிக்கு KNMT திட்டம் 2022–23ன் கீழ்கீழ்கண்ட விபரப்படி பணிகள் மேற்கொள்ளப்படும் என அறிவித்துள்ளார்கள். ஏனவே அப்பணிகளுக்கு திட்ட பிரேரணை நிர்வாக அனுமதி பெற விரிவானதிட்ட அறிக்கை மதிப்பீடுகள் மற்றும் அது சார்ந்த பணிகள் தயார் செய்வதற்கு போதிய பணியாளர்கள் நகராட்சி வசம் இல்லாததால் அப்பணிகளை மேற்கொள்ள கலந்தாலோசகர் நிறுவனம் (Consultant) மூலம் பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

செலவினம் ரூ. 10.00 இலட்சத்திற்கு மன்றஅனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | திட்டம் பெயர் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | பேருந்துநிலையம் மேம்பாடுபணி | தேவகோட்டை நகராட்சியில் உள்ள பேருந்து நிலையத்தில் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளுதல். | 100.00 |
| 2. | வாரச்சந்தை மேம்பாடுபணி | தேவகோட்டை நகராட்சியில் உள்ள வாரச்சந்தையில் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளுதல். | 300.00 |
| 3. | பூங்கா மேம்பாடுபணி | தேவகோட்டை நகராட்சியில் உள்ள அழகப்பா ஊரணி பூங்கா மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளுதல். | 100.00 |
| 4. | நீர்நிலைகள் மேம்பாட்டுபணி | 1. தேவகோட்டை நகராட்சியில் காட்டுரணியில் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளுதல். | 200.00 |
| | | 2. தேவகோட்டை நகராட்சியில் பெருமா கண்மாய் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளுதல். | 200.00 |

| | | | |
|---|---|---|---|
| | | 3. தேவகோட்டை நகராட்சியில் அழகப்பாஊரணி மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளுதல். | 100.00 |
| | | | 1000.00 |

<u>அலுவலகக் குறிப்பு –</u>

1) மேற்காணும் பணியின் அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.81 – அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள்–82</u>

தேவகோட்டை நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் அலுவலக பயன்பாட்டிற்கு புதிய பொலிரோ (Bolero) ஈப்பு வாகனம் ரூ.8,27,742/– மதிப்பீட்டில் வாங்க நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் 24.05.2022–ந் தேதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டது. தற்போது மகேந்திரா நிறுவனத்திடம் இருந்து பொலிரோ வாகனத்திற்கு ரூ.9,18,373/–க்கு பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்படி மீதம் ரூ.90,631/–ஐ கூடுதல் செவீனமாக வரப்பெற்றுள்ளது. எனவே ரூ.90,631/–க்கு கூடுதல் செலவீனம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு –</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.82 – அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள்–83</u>

தேவகோட்டை நகராட்சியில் நகர்புற உள்ளாட்சி தேர்தல் நடைபெற்று புதிதாக பொறுப்பேற்றுள்ள நகர்மன்ற உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்கிட உத்தேச செலவீனம் ரூ.30,000/– த்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு –</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.83 – அனுமதிக்கப்பட்டது.**

(ஒப்பம்)கா.சுந்தரலிங்கம்

**நகர்மன்ற தலைவர்**
**தேவகோட்டை நகர்மன்றம்**